**சாட்சிகள் வாக்குமூலம்**
**பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No.1/2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜாமுகம்மது<br>(பி.வா.சா.–1) | தொழில் | | |
| த/பெ.<br>க/பெ. | : | | வயது | | |
| தாலுகா | : | | நாள் | : | 16.07.2026 |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

<u>**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை :**</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

<u>**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :**</u>

எனக்கு எழுதப்படிக்கத் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எதிருரையில் உள்ள சங்கதிகள் தெரியுமா என்றால் தெரியும். வாதிக்கும் எனக்கும் நடந்த திருமணம் செல்லத்தக்கதல்ல என்று தாக்கல் செய்த வழக்கில் வாதி கோரும் பரிகாரம் வழங்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்று எதிருரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தற்போது எனக்கு வாதியை விட்டு பிரிந்து வாழ்வதில் விருப்பம் இல்லை. வாதி எனக்கு அனுப்பிய குலா அறிவிப்பை நான் பெற்றுக் கொண்டு நான் எவ்வித பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். எனக்கும் வாதிக்கும் பலமுறை சமரச பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் ஒருமுறை தான் சமரச பேச்சு வார்த்தை நடைபெற்றது. எங்கு நடைபெற்றது என்றால் பாலசமுத்திரத்தில் வாதியின் பெரியப்பா வீட்டில் நடைபெற்றது. வாதியின் சோழமாதேவி என்ற ஊரிலும் வாதி தற்போது வசித்து வரும் பெங்களூரிலும் நான் சென்று சமரச பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி நடந்த பேச்சு வார்த்தைகளில் நான் வாதியை விட்டு பிரிவதற்கு சம்மதம் தெரிவித்தேன் என்றால் இல்லை. மேற்படி நடந்த பேச்சு வார்த்தைகளில் நான் வாதியை விட்டு பிரிவதற்கு சம்மதம் தெரிவித்தேன் என்றாலும், தற்போது பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி தரப்பில் குத்தகைக்கு ரூ.15 இலட்சம் வீடு பார்க்க வேண்டும் என்றும், மாதம் ரூ.60

ஆயிரம் என்னுடைய வருமாத்திலிருந்து வீட்டிற்கு கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். வாதி பெற்றோர்கள் வாதிக்கு திருமணத்தின் போது போட்ட நகைகள் மற்றும் நான் வாதிக்கு போட்ட மகர் ஆகியவற்றை வாதிக்கு நான் திருப்பி கொடுத்து விட்டேன் என்றால் சரிதான். நானும் வாதியும் சேர்ந்து கடந்த 13.11.2025 ஆம் தேதி இருவரும் பிரிந்து வாழ்வதென்று சம்மத பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். மேற்படி என்னிடம் காட்டப்படும் சம்மதப் பத்திரம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி சம்மதப் பத்திரத்தில், சம்மதப் பத்திரம் ஏற்படுத்தியதற்கு பின்பு முறையாக நீதிமன்றத்தின் மூலம் தலா பிரிவு ஏற்பட்டதை சட்டப்படி விளம்புகை பரிகாரம் கோரி நம்மில் யார் வழக்கு தாக்கல் செய்தாலும், அதில் மற்றொருவர் தலையிட்டு ஆட்சேபனை தெரிவிக்கக் கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சம்மதப் பத்திரம் ஏற்படுத்திய போது யார் யார் இருந்தார்கள் என்றால் வாதியின் வீட்டாரும், எனது வீட்டாரும் இருந்தார்கள். மேற்படி சம்மதப் பத்திரம் ஏற்படுத்திய பின்னர் வாதியின் பண்ட பாத்திரம் மற்றும் நகைகள் அனைத்தையும் நான் வாதியையும் எடுத்துச் செல்லுமாறு நான் வாதியிடம் சொன்னேன் என்றால் நான் சொல்லவில்லை. நான் தான் வாதியிடம் சண்டை போட்டு விட்டு வாதியை பாத்திரங்கள் அனைத்தையும் எடுத்துச் செல்லுமாறு சொல்லிவிட்டு வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்மத பத்திரம் ஏற்படுத்திய பின்னர் நான் வாதியிடம் சண்டை போடவில்லை.

**(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S
Digitally signed by APOORVA S
Date: 2026.07.16 15:58:10 +0530

District Munsif,
Palani.